
வயிரவன்கோவில்
வடிவுடையம்மை
பிள்ளைத்தமிழ்



சிவமயம்

சிறப்புப்பாயிரம்.

அரியக்குடி
ம-ா-ா-ஸ்ரீ
சா. கி. அரங்கநாதச்செட்டியார்
இயற்றியது.

நேரிசை ஆசிரியப்பா.

மலரவன் வகுத்த நிலமிசைச் சீர்க்கும்
வழுதிமா நாட்டகத் தெழுதலாக் கிளவிப்
பொருளினைத் தமிழா னருளிய குரவர்
தேவா ரத்தொடை மேவா மிலைச்சிய
வீரேழ் பதியிற் கூரே ருடைத்தெனு
நத்தூர் வயற்றிருப் புத்தூர் மருங்காக்
குறிஞ்சியா தியவயிற் செறிந்தபல் வளனுஞ்
சூளிகை வாய்ந்த மாளிகை நிரையுஞ்
செந்தழ லோம்பு மந்தண ரகரமுந்
தீதுதீர் வேத மோதுகல் லூரியுஞ்
சதுக்கமுஞ் சாலையு மதுக்கமழ் சோலையு
முண்ணீ ரனவாந் தெண்ணீர் வாவியுந்

துன்னுபு திகழ்தரு நன்னக ராகி
மணிதுற் றிலங்கு வணிகர்க் குரிய
தென்பதி யாலய மொன்பதி லொன்ருய்ச்
செயிரவந் தணங்தொளிர் வயிரவன் கோயில்
வளரொளி நாதன் கிளரொளி வாமத்
தொருவலின் றமர்ந்த வருள்வளர் கன்னி
நகிறள ராமே யகிலமு மீன்ற
துடியிடை மேகலை வடிவுடை யம்மைமேற்
பூவிரி பொழில்சூழ் காவிரி யொழுகு
மயிலாடு துறையி னயல்சேர் சேந்தன்
குடிகுடி யிருக்கு மடிமையில் சீலன்
வரமலி வேளாண் மரபினில் வந்தோ
னைவறு தவத்துச் சைவசூ ளாமணி
மேக்குயர் மூன்று தீக்கையும் பெற்றுளா
னற்புதப் பாவலன் விற்பன சிரேட்டன்
றேசிற் பொலிநட ராசப் பெயரான்
பிள்ளைத் தமிழ்மகிழ் கொள்ளக் கழறினு
னுக விதிற்பிழை போகிய வாய்ந்து
நனிசுவைத் திஃதென வினிது திருத்தினன்
மாவி சால தேவி சால
மருந்திரு வைசியப் பெருங்குல திலகன்
விலக்கருஞ் சீர்த்தி யிலக்கு மணப்பேர்
நண்ணிய கண்ணியன் பண்ணிய புண்ணியப்
பயனு வுதித்த நயனு ரறிஞ
னிலக்கிய விலக்கண நலத்தகு கலைக்கட
னுற்கவி மழைபொழி சூற்கொள்சி மூத

பிறுமாங் தெதிர்ந்தார்த் தெறுமாண் சிம்புள்
வடமொழி மாட்டுந் திடனுறு பயிற்சியன்
சிவாகமச் சென்னி யவாயசித் தாந்தம்
படைத்தமெய்ந் நெறியே கடைப்பிடித் திட்டோன்
செல்வங் கொடைபுகழ் மல்குங் கற்பக
மான்றோர் குழாத்துட் சான்றோ னென்பான்
றெழுதெழீஇ யரனையெப் பொழுது மறவா
னிச்சையன் போல நிச்சைய னெவற்றினு
மென்பாற் கேண்மையை யன்பாற் கெழுமியோன்
பொன்னுறழ் சற்குண சிங்கய
னென்னு நாம மன்னிய மன்னே.

சிறப்புப்பாயிர முற்றிற்று.

30/4

உ

கணபதிதுணை.

வயிரவன்கோவில்

வடிவுடையம்மை

பிள்ளைத் தமிழ்.

விநாயகர் துதி.

சீர்கொண்ட வண்டப் பரப்புமுழு தாளுடைய
செய்யவள ரொளியீச னார்
சித்தக் களிப்பினுக் கொத்தபரி பூரண
சிதானந்த சத்தி யென்னு
மேர்கொண்ட பிடியைக் களிற்றுருவு கொடுபுணர்ந்
தின்புற்று நல்க வந்த
விணையிலாப் பிரணவத் துருமருவு கரிமுகவ
னிருசரண மேத்தெ டுப்பாம்
பார்கொண்ட வயிரவன் கோவிலென் றுலகெலாம்
பரவுபதி விரவு செல்வி
பழமறையின் முடிமீ திருந்துமஃ துணராத
பரிசுபெறு மெம்பி ராட்டி
வார்கொண்ட தன்றனத் தமுதளித் தொருகுழவி
வடிதமி ழிருக்கு மொழிய
வைத்தபுக ழுத்தமிய ருட்கண்வடி வுடையம்மை
வண்பொருட் கவித ழையவே.

காப்புப்பருவம்.

திருமால்.

இரவியா தியகோளு நாளுமெங் நாளுநே
ரேகாத வண்ண மோங்கி
யிறுமாந்த விந்தம் பிலத்தூடு புகவுய்த்த
வெறழ்வலிப் பொதிய முனிவன்
கரவிசே டத்தினுற் குற்முல நகர்வயிற்
கருமேனி நீங்கி மேற்றுன்
காணரிய சிவலிங்க சாரூப்பி யம்பெற்ற
கண்ணு மண்ணல் காக்க
பரவிநீ டன்பக நிறைந்துபுறன் வழிகின்ற
பான்மையென விழியி னின்றும்
பரானந்த வாரிவர மெய்ம்மயிர் சிலிர்த்துப்
பணிந்தெழுந் துருகி நிற்கு
மிரவிலாத் தூமனத் தொண்டர்க ணினைத்தன
வெனைத்துந் தினைத்த னைப்போழ்
திடையுதவி வடுகபுரி விடலரிய வடிவுடைய
விறைவியை யிளங்கி ளியையே. (க)

வளரோளிநாதர்.

வேறு.

நெடிய மாலினெடு பிரமன் வானவர்மு
னீடிசைக் குரிய பாலர்க
ணிருவி கற்பமுற மனநி றுத்தியுயர்
நிட்டை கூடிய நிராசையோர்

நினைவி னுக்கரிய பரம காரண
நிரந்த ரக்கருணை நிலயமே
நீல கண்டபரி பூர ணப்பிரம
நிகரில் யோகபர தாணுவே
யடிய மாலகல வருள்செ யென்றுநனி
யனுதி னம்பரவு மன்பருக்
ககமி ருந்துவரு துயர்க ளைந்துதிரு
வருள்வ ழங்கியிடு மமலனே
யசுர ருக்கமர ரஞ்சு கின்றமை
யறிந்து சீர்வடுக வயிரவ
வனக னைக்கொடுவெல் வளரொ ளிப்பெயர்கொ
ளாதி யேயினி தளித்தியான்
முடிகொண் மால்வரையின் மகளை னுவகில
முழுது மீன்றதனி முதல்வியை
முதிய நூல்வழியி னெழுகு மேதகையர்
முன்னி வாழ்த்துகவு மாரியை
முத்தி மார்க்கமுற முயலும்யோகியர்கண்
மூழ்கு மிக்கசுக வாரியை
மூவி ரண்டுபகை வென்ற ஞானியரை
முதிரு மின்னளியி னேக்குருப்
பொடிய ணிந்துமிளி ரடிக டாணிழல்
புகுத்தி யுண்மகிழு மம்மையைப்
புராத னத்ததுநம் வடுக நாதனது
புரமெனப் புகழ்ப டைத்தது
போக மாரமரர் கோனகர்க் கிணைசொல்
புண்ணி யப்பதி யமர்ந்துவாழ்

பொருவி லாதவடி வுடைய தாயையருள்
பொழிதரும் பசிய முகிலையே. (உ)

விநாயகர்.

வேறு.

பூத வுறுப்புங் கயானனமும்
பொலியுந் தெய்வத் திருவுருவும்
புனைந்து கரிமா முகத்தவுணன்
பொன்றப் புரிந்த புகழ்க்கருணை
நாத னெனநின் றிறைஞ்சடியார்
நலிவு பாற்று நற்பொருளே
ஞானக் களிறே யருணிதியே
நந்தா விளக்கே போற்றுதிநீ
சீத மதிய முடிக்கணிந்தோன்
சேயாம் வடுக வைரவப்பேர்ச்
சீர்சால் புரியி னிறைந்தோங்குஞ்
சிந்தா மணியை யெந்தாயைப்
பாதச் சிலம்பாய்க் கிடந்தலம்பும்
படர்வே தாந்தப் பசுங்கிளியைப்
பரவுந் தொழும்பர்க் கருளும்வடி
வுடையா ளென்னும் பாவையையே. (௩)

முருகக்கடவுள்.

கருணைக் கடலே வரநிதியே
கமலா சனத்தோன் சிரநடுங்கக்
க்ருதுங் குடிலைப் பொருள்வினவிக்
கரத்தாற் புடைத்த கற்பகமே

சொருண மயின்மேற் கொண்டருளிச்
சோராச் சூரின் வலிதொலைத்த
சுத்தப் பிரம குமரபர
தூயோய் தொடர்ந்து புரந்தருடி
யருண னிறம்வெள் கிடக்காந்தி
யளித்துக் கிளரும் வளரொளியா
மம்பொன் னுகத் தமர்ந்தவடி
வுடையா ளென்னு மருமருந்தை
வருணம் பலவாய்த் தோன்றியொளிர்
மணியின் கொழுந்தை வாழ்முதலை
வையம் பரவும் வைரவப்பேர்
வாய்த்த புரம்வாழ் வஞ்சியையே. (ச)

பிரமன்.

கடலி னெழுந்த கடுவினுக்குக்
கலங்கி மேனி கறுப்புற்ற
கமலக் கண்ணன் றிருவுந்திக்
கஞ்சத் தடமே யிடமாக
வடல்கொண் டண்ட முழுதியற்றி
யசர சரமா கியபேத
மனைத்தும் படைத்த நான்முகத்தெம்
மைய னினிது புரந்திடுக
வுடலி னுலவு முயிரொனவவ்
வுயிர்க ளெவைக்கு முயிராகி
யுயர்நா தாந்தப் பெருவெளியி
னுலவி நடஞ்செய் குலமயிலைப்

படருஞ் சீர்த்தி வளரொளிப்பேர்ப்
பரமன் பாக மகலாத
பரையை வைர வப்பதிவாழ்
படியில் வடிவம் பிகைதனையே. (௫)

தேவேந்திரன்.

வேறு

நினைவரிய பல்கலைச் சொற்பொருட் பயனாகி
நித்தியா னந்த மயமாய்
நின்றிலகு வளரொளிப் பரமற்கு நளிகடலி
னீடுவிட வேக மேறு
தினியதன் செம்பவள வாயூறு தெள்ளமுத
மெஞ்ஞான்று மூட்டு கின்ற
வெழில்குலவு பொழில்சுலவு வடுகபுரி வடிவுடைய
விறைவியைத் தனிபு ரக்க
வனலியுமை யவிசொரிந் தச்சுவச் சதமேத
மாற்றிவிண் ணாட்டி னரசா
யரியா சனத்துவதி யயிரா வதக்குரிசி
லயில்கூரும் வச்சி ரத்தோன்
கனதனத் தரமகளி ராடிய விசைத்திடக்
கந்தருவ ரமரர் தாங்கக்
கவிகையைக் குவிகைமுனி வரர்காவு சிவிகைவரு
கண்ணு யிரக்க டவுளே. (௬)

திருமகள்.

வேறு.

செய்ய திருப்பாற் புணரியின்கட்
சீத மதிவா னமுதோடு

சேர வுதித்துத் தேவர்களுட்
சிறந்தோ னிதயங் குடிகொண்டு
வையம் பரவு பொருள்வளனு
மற்றை வளனும் வளர்பாக்கு
மலர்க்கண் பரப்பு மிலக்குமிப்பேர்
மாதர் மாதர் பதம்பணிவா
முய்யும் பொருட்டுப் புவனமெலா
முடன்று படர்ந்து மிடைந்தகடு
வுண்ட கண்ட வளரொளிக்கு
ளொருவா துறையும் பேரொளியென்
றைய மின்றி யாகமங்க
ளறையும் வடுக நாதபுரத்
தன்னப் பெடையை வடிவுடைய
வருமைக் குயிலைப் புரந்திடவே. (எ)

கலைமகள்.

வேறு.

வெண்டரள நிழன்மணியை நல்லார் கொளத்தந்து
வெறியுலாம் வேரி வாரி
வெம்பசி வருத்தவோ லிட்டுவெரு வண்டர்க்கு
மிக்குண விருந்த ளிக்கு
முண்டகத் தவிசுகந் தெண்டகப் பொலியுமொரு
முதல்வி கல்வித் செல்விநா
மூகையே மாகாது நமர்நா விருந்தருளு
முனிவிலாப் புனிதை காக்க
தண்டமி ழெனுங்கன்னி தாண்டவம் புரிகின்ற
தகுதிசால் பாண்டி நாடு

தரணியுள வேனைநாட் டினையொல்லை வெல்லுபு
தருக்கத் தழைந்து நிலவு
மண்டளவின் மல்லல்கெழு வயிரவன் கோவில்வளர்
வளரொளிப் பரம யோகி
வாமத்து வைத்துநித் தங்கொஞ்சு பைங்கிளியை
வடிவுடைக் கவுரி தனையே. (அ)

காளி.

கருதுமவி கண்ணுதற் குதவாத தக்கன்
கருத்தழிந் திடரின் மூழ்கக்
கலகமிடு சூலவேல் கைக்கொண்டு வடவையைக்
கட்கடைக் கடையு குத்து
விருதினெடு சென்றமரர் குழுவினைக் கழுதின
மிசைந்திட விரைந்த டர்த்து
வித்தகச் சூரரிப் பிணவெனத் திசைபோய
வீரமா காளி காக்க
வருதிநீ யிவணெனப் பரிதியை விளித்தவன்
வாயில்வாய் பற்ற கர்த்து
வானடர் தலைவனைத் தோணெரித் தெச்சனது
வன்றலை யரிந்த பெம்மான்
சுருதிமுடி யறியாத முடிமீது தன்னடிச்
சுவடுபுனை வித்து மகிழுந்
துடியிடையை நெடியபுகழ் வடுகபுரி வடிவுடைய
சுந்தரியை யந்த ரியையே. (கூ)

சத்த மாதா.

அருமைபெறு பிரமாணி யான்றகவு மாரியோ
டருண்மயேச் சுரிநா ரணி

யடலுறு வராகிவா ணேந்தரு நிழற்றவா
மூயிராணி காளி யாய
பெருமைமலி யோரொழுவ ரன்னேமா ரன்பரைப்
பிரசாத மெளிதி னல்கும்
பெண்ணினுக் கரசியர்க ளின்னவர்த மென்பதப்
பிரசமலர் சென்னி புனேவா
மிருமையினு முயர்பதவி யடியவர்கள் கொளவுதவி
யெங்குநிறை யெம்பி ராட்டி
யெண்ணரிய பல்கோடி வேதத்தி னந்தத்
திருந்துவிளை யாடு சிறுமி
பொருதரங் கத்தகழி வாய்ப்புனலே வாய்ப்பெய்து
பொற்புரிசை யரிதி னேறிப்
புயன்மாரி பொழிவடுக புரிமேவு வடிவுடைய
பொன்னென்னு மின்ன முதையே. (கO)

காப்புப்பருவ முற்றிற்று.

செங்கீரைப்பருவம்.

கங்கைமுத லெழுநதிக் கலவைகொ ணறும்புனற்
கமலேகர கரக மதனுற்
கனிவினு லாட்டிகற் றிலதமிட் டுச்சியிற்
கதிர்மணிச் சூட்ட ணிந்து
செங்கைக்கு வண்டொடி செழுங்கழுத் தணிவடஞ்
சிற்றரையின் மிளிர்மே கலே
சீர்ச்செவிக் கொளிர்தோடு பணிபுரிங் துலகெலாஞ்
சேவைசெய் திருத்தா ளினிற்

பொங்குநவ வீரர்முற் றோன்றிய மணித்தண்டை
பூட்டிவான் மகளி ரோடு
புண்ணியச் சுருதியாற் போற்றிசைத் தருகுறப்
பூந்தளிர்க் கையை யூன்றித்
திங்கண்முக மேநோக்கி வடிவுடைய வன்னமே
செங்கீரை யாடி யருளே
திருமருவு வயிரவப் பதிமருவு சோதியே
செங்கீரை யாடி யருளே. (௧)

தித்தித்து மதுரம் பழுத்தொழுகு நின்மழலை
செவ்விதிற் செவிமடுத்துச்
செழும்பொழிற் கோகிலப் புண்மேனி கருகிடத்
திவவியாழ் தலைகு னிதரப்
பத்திக் கதிர்க்கற்றை பெருகிவழி திருமுகம்
பார்த்துமுழு மதியம் வெள்கப்
பங்கயப் பூக்குலங் கூம்பியும் வாடியும்
பன்னிலை படைத்து மாழ்க
வெத்திக்கு முலவிமெய் யியன்மணங் கமழ்தலா
லின்னறுஞ் சண்ப கப்போ
திறப்பது குறித்ததென வுயர்பாத வக்கொம்ப
ரிடைஞான்று கொண்டு புலரச்
சித்திக்கு வித்தான வடிவுடைய வன்னமே
செங்கீரை யாடி யருளே
திருமருவு வயிரவப் பதிமருவு சோதியே
செங்கீரை யாடி யருளே. (௨)

பணிதந்த நீள்பணியை யணிதந்த வளரொளிப்
பரனிடம் பிரிய கில்லாய்
பனிமலைத் தெய்வதஞ் செய்தவங் கண்டவன்
பான்மக ளெனப் படர்ந்தாய்
துணிதந்த சதகோடி சூரிய ரொருங்கே
துதைந்துசுடர் விடினு மொவ்வாத்
துகடீர் தனிச்சுயம் பிரகாச புஞ்சமாய்த்
தொல்புவன முற்று முற்றாய்
கணிதந்த வுருவெய்தி வல்லிவல் லிக்குக்
கணிப்பரிய விம்மி தங்கள்
காட்டியம் மானைக் கலந்துவிளை யாடிளங்
காளையை யுயிர்த்த பிடியே
திணிதந்த வளர்கொங்கை வடிவுடைய வன்னமே
செங்கீரை யாடி யருளே
திருமருவு வயிரவப் பதிமருவு சோதியே
செங்கீரை யாடி யருளே. (ங)

சுருதியின் றேடும் புராணத் திரட்சியுந்
துன்றுமிதி காச வினமுந்
தொல்லைமனு நூலாதி மிருதிக் குழாமுந்
துளக்கமில் கலைத் தொகுதியுங்
கருதியள விட்டின்ன தன்மைய ளெனச்சிறிது
கட்டுரைத் திடவு மொண்ணுக்
கண்ணுதற் பண்ணவன் றிண்ணநெஞ் சிளகுறீஇக்
காமமிக் கூச லாட

விருநிலன் விசும்புபா தலமுதல வுலகநிரை
யேய்ந்தபே ரண்ட மாட
விருவகைத் தாமரை யிருக்கைக் கிழத்திய
ரொழுந்துவகை பொங்கி யாடத்
தெருமர லொழித்தாளும் வடிவுடைய வன்னமே
செங்கீரை யாடி யருளே
திருமருவு வயிரவப் பதிமருவு சோதியே
செங்கீரை யாடி யருளே. (ச)

எண்ணிலவு தாவரஞ் சங்கம மெனப்படு
மெவற்றையும் விதிக்கு மேலோ
னிப்பொரு ளனைத்தும் பிறழ்ச்சியடை யாவா
றிருத்திப் புரக்கு மாலோன்
பண்ணிலவு மாயா முதற்கா ரணத்துற்
பவித்தபிர பஞ்சம் யாவும்
பண்டையி னொடுக்கிப் பசுக்களை யிளைப்பாற்று
பரனெனுந் தேவர் மூவர்
விண்ணிலவு மேதக்க பதவியி லமர்ந்துதம்
வினையினி தியற்றும் வண்ணம்
விளர்த்துக் கறுத்துச் சிவந்தகன் றரிசிதறு
விழியாற் கடைக்க ணிப்பாய்
தெண்ணிலவு புன்முறுவல் வடிவுடைய வன்னமே
செங்கீரை யாடி யருளே
திருமருவு வைரவப் பதிமருவு சோதியே
செங்கீரை யாடி யருளே. (ரு)

வேறு.

குவடுறு பெருவரை மகளென வுலகவர்
கொண்டா டுங்குயிலே
குணமிகு தவர்பெற விருமையு முதவுங்
கோதில் கனழச்சுவையே
கவடறு மனனுடை யடியவர் நுகர்தரு
கற்பக நற்கனியே
கரைபொரு திரைதவழ் கடலெழு கொடிய
கடுத்திகழ் கந்தரனெந்
தவமலி பயனென வனுதின நினைபு
தழீஇயயி லாரமுதே
சரணந ளினமலர் சரணடை பவர்வினை
தகரும் படிநூறி
யவமகல் வாழ்வருள் வடிவுடை யம்பிகை
யாடுக செங்கீரை
யரிதொழு வயிரவ புரியை மகிழ்ந்தவ
ளாடுக செங்கீரை (கா)

திரிபுர மிளநகை யெரியுண வுதவிய
செம்ம லுளத்துறைவாய்
தெளிதமி ழினிமையின் மொழிபவர் கருதிய
செல்வ மெலாந்தருவாய்
விரிமது வொழுகிய விரைகமழ் மரைகெழு
மெல்லியன் மடமானூர்
விரைகுநர் சயசய சயவென வருகு
விளம்பி வழுத்தியிடப்

பரிதிகி ரணவெயி றனைநனி யிகழ்புரி
பான்மை யெனக்கிளரும்
பருமணி குயிலுறு பலபல பணியொளி
பளபள பளபளென
வரிய மருந்தன வடிவுடை யம்பிகை
யாடுக செங்கீரை
யரிதொழு வயிரவ புரியை மகிழ்ந்தவ
ளாடுக செங்கீரை. (எ)

உரகர்கள் பணிபணி யிறைகடை கயிறென
வுறமந் தரநட்டே
யொருபுற னமரரு மொருபுற னசுரரு
முததி மதிக்குங்கால்
விரவிய வளமலி பொருள்களு ளவரவர்
வேண்டுவ கைக்கொண்டு
விடமிகு கொடுமையொ டெழுதலும் வளிபொர
விளிமுகில் பொரவோடிப்
புரகர சிரகர பரசிவ வரத
புராதன வபயமெனப்
புகறலு மதையுட னமுதுசெய் தருளிய
புண்ணிய வளரொளியா
மரனிட மருவிய வடிவுடை யம்பிகை
யாடுக செங்கீரை
யரிதொழு வயிரவ புரியை மகிழ்ந்தவ
ளாடுக செங்கீரை. (அ)

அம்பினை வென்றுசு ரும்புது ரந்தலை
யார்கட லைச்சினவி
யம்புய மலரை வெருட்டி யிளம்பிணை
யஞ்சி மருண்டிடலங்

கம்பித மெய்த விழித்து மதர்த்துள
கண்ணியர் மையலொரீஇக்
கனிவிற் றினநின கழலைப் பரசுநர்
காணிய நின்றிடுபூங்

கொம்பனை யாயதி கோமள சாமள
குந்தள கோகிலமே
குண்டகழ் சுலவிய வயிரவ நகரி
குலாய மடப்பிடியே

செம்பிய னடு புரந்த துரந்தரி
செங்கோ செங்கீரை
செந்துவர் வாய்மயில் சுந்தர நாயகி
செங்கோ செங்கீரை. (சு)

ஆங்கு நிரந்தர நினையே வழிபடு
மந்தண னொருவனையின்
றண்மிய திதிதான் யாது கொலோதென்
றரசன் வினவியிட

வோங்கிய குகுவைப் பூரணை யெனலு
முவாமதி காட்டெனென
வுன்பத மன்னோன் வேண்ட மணித்தோ
டெய்த்துமிழ் வெண்ணிலவாற்

றூங்கிருள் பருகுந் திங்களின் வானிற்
றேன்றக் கருணைசெயுஞ்
சுத்த நிராமய நித்திய பூரண
சொப்பிர காசமயீ

தேங்கு சிறப்புடை வயிரவ பதிநிதி
செங்கோ செங்கீரை
செந்துவர் வாய்மயில் சுந்தர நாயகி
செங்கோ செங்கீரை. (௧0)

செங்கீரைப்பருவ முற்றிற்று.

தாலப்பருவம்.

சிறுகட் பெருங்கான் மதக்களிறு
தெளிநீர் வயிர வத்தடத்துட்
சென்றுட் டயர வெழுதுளிபோய்ச்
சேஞர் நதியிற் கலந்திடக்கண்

டிறுதற் ருெழிநீர் புலவர்சில
ரினிது மூழ்கும் புண்ணியத்தா
லெந்தை பெருமான் சிவலோகத்
தெய்தி யனையா னுருப்பெற்று

மறுவற் றுறையக் காரணமாய்
வயங்கும் வடுக நாதபுர
மன்னி விளங்கு வளரொளியின்
வாமத் திருக்குஞ் சேமவைப்பே

தறுகட் பாசந் தவிர்த்தொன்றைத்
தருவாய் தாலோ தாலேலோ
தண்ணா ரமுதே வடிவுடைய
தாயே தாலோ தாலேலோ. (க)

வித்தைக் கெல்லா மொருவித்தே
மெய்யன் பாள ரகத்திருள்
விடிய வுதிக்கு மிளங்கதிரோ
வேதா கமமா கியமுதனூல்
பத்துத் திசையிற் படுமெண்டப்
பரப்பிற் பல்கு மெவ்வுயிரும்
பயந்து மின்னுங் கன்னியெனப்
பகர நின்ற வற்புதமே
சத்தித் தளிகளிசை முரன்று
தாது குடைந்து மதுமாந்துந்
தடங்கா வடுக நாதபுரத்
தலமுன் புரிந்த தவப்பேறே
தத்தைக் கினிமை பயிற்றுமொழித்
தையா ளுலோ தாலேலோ
தண்ணா ரமுதே வடிவுடைய
தாயே தாலோ தாலேலோ. (உ)

முடிக்கொண் டமரா பதிபுரக்கு
முகில் வாகனத்தான் றேவியொடு
முளரிப் பொகுட்டிற் சந்ததமு
முனிவின் றுறையு மொய்குழலா

ரடிக்கட் குறுகி யெம்மன்னை
யருளா நின்ற பணியாவென்
றகநெக் குடைந்து கசிந்துருகி
யங்கை பிணித்து வாய்புதைத்துப்

படிக்கு ணினது திருமேனி
படியிற் கன்றும் பைப்பயநீ
படியில் விளையாட் டியாங்களிக்கும்
படியாற் செய்தி யெனப்போற்றுந்

தடித்துக் கொடியே வடுகபுரி
தழைந்தாய் தாலோ தாலேலோ
தண்ணா ரமுதே வடிவுடைய
தாயே தாலோ தாலேலோ. (ரு)

வெள்ளித் தகட்டி னிளவாளை
விசும்பு கிழிய வெடிபாய்ந்து
வேதா வுலகின் மானதப்பேர்
வேய்ந்த மடுவைப் புக்குழக்கிக்

கள்ளிற் பொலியுங் கற்பகப்பூ
வுகுத்துக் கமுகின் மடல்கீறிக்
கமழ்தே மாவின் கனிசிந்திக்
கதலித் தாற்றுப் பழஞ்சிதறித்

துள்ளித் துனைந்து மீட்டணைந்து
துளைந்து மதர்க்கும் பெருவாவி
சூழ்ந்த வடுக நாதபுரத்
தோகாய் கவர்ந்த முதலையுயிர்

தள்ளிக் கரியைக் காத்தபிரான்
றங்காய் தாலோ தாலேலோ
தண்ணு ரமுதே வடிவுடைய
தாயே தாலோ தாலேலோ. (ச)

மண்ணை யருந்து கின்றதரு
மந்த குழவி யென்றெடுத்து
மடியி லிருத்தி யசோதையெனு
மங்கை வாயைத் திறந்திடலு
மெண்ணை யிகந்த பல்லுலகு
மிரண்டு திணைய வணுக்குலமு
மிருப்பக் காணூஉ மகிழ்வச்ச
மீண்டி மாயை வடிவாய
வண்ண னெடியோ னிவனென்ன
வறிந்து போற்ற வளர்குரிசி
லடைந்து வேண்ட வரங்கொடுக்கு
மம்மே வடுக புரியமர்ந்த
தண்ணென் குணத்தாய் கற்பகத்தின்
றளிரே தாலோ தாலேலோ
தண்ணு ரமுதே வடிவுடைய
தாயே தாலோ தாலேலோ. (ரு)

வேறு.

அத்தி யுரித்தத ளைக்கலை யாக
வணிந்து களிப்புறுவோ
னையந் தம்மின் றெரிவையி ரென்ன
வகந்தொறு மேற்றுண்போ

னத்துபு சுடலையி னடலையை யென்று
நயந்து தரித்திடுவோ
ஞணில னென்பு புனைந்து பிசாசொடு
நாளு நடம்புரிவோ
னித்தகு பித்தனை யொருகா லம்மியி
லேற்றிய கையாற்றௌட்
டிட்ட தவத்தாற் றேவரின் மூவரி
னேற்ற முறச்செய்தாட்
சத்தி பராபரை வடிவுடை நாயகி
தாலோ தாலேலோ
தனிகர்கள் பரவிய வயிரவ பதியின
டாலோ தாலேலோ. (சு)

கவள மெனத்தொழு பவர்வினை யுண்டிடு
கரியை யளித்தபரங்
கருணை நெடுங்கட லாகிய சங்கரர்
கனிவி னருந் தமுதே
துவளு மிளங்கொடி யனைய மருங்குற்
றோகைக் கேகயமே
துணைநினை யலதிலை யெனமன நினைகுநர்
துயர்களை களைகண்ணே
யவளவ னதுவெனு முலகா யல்லையு
மாகி நிறைந்தவளே
யரியய னிந்திரன் முதலிய கடவுள
ரறிவரு முழுமுதலே

தவழ்நில மதிமுக வடிவுடை நாயகி
தாலோ தாலேலோ
தனிகர்கள் பரவிய வயிரவ பதியின
டாலோ தாலேலோ. (எ)

அணிதரு சிந்துர திலத மிலங்கிய
வானன சுந்தரியே
யழகிய நாசி புனைந்திடு முத்தணி
யதனிற் பொலிகதிராற்
பணிவொடு தொண்டுசெய் யடியவர் மண்டிருள்
பாற்றுறு கோற்றொடியே
பவளச் செப்பிடை நித்தில மணிகள்
பதித்தன வாய்நகையாய்
திணிவலி வெஞ்சூ ருடல்வடி வேல்கொடு
செற்றுப் பண்ணவரைச்
சிறைவிடு வித்துப் பதவி புகுத்திய
சேயைப் பெறுதாயே
தணிவறு பேரருள் வடிவுடை நாயகி
தாலோ தாலேலோ
தனிகர்கள் பரவிய வயிரவ பதியின
டாலோ தாலேலோ. (அ)

முதிருங் கனியிற் சுவையுங் காசிடை
மூசிய வொண்சுடரு
முளரியில் வெம்மையு மறலிற் றண்மையு
மொட்டவிழ் நறுமலரிற்

பொதியுங் கந்தமு மாமென மூன்று
புரத்தை யெரித்திட்ட
புண்ணிய முதல்வன் றன்னுழை நீங்காப்
பொன்னங் கொம்பனையாய்

நிதியுந் தேனுவு மைந்து வகைத்தாய்
நீடிய கற்பகமு
நிழலுமிழ் சிந்தா மணியும் விரும்பிலர்
நினைநினை நெஞ்சினர்பாற்

றிதங் கிழுதுறழ் வடிவுடை நாயகி
தாலோ தாலேலோ
தனிகர்கள் பரவிய வயிரவ பதியின
டாலோ தாலேலோ. (சு)

மாசக லடியவர் மதிவயி னூறி
வழிந்திழி தெள்ளமுதே
வான்முக டணவிய சிகரத் திமகிரி
வாய்த்த செழுந்தேனே

தேச மனைத்தும் பையு ளொழிந்து
செழித்து வளங்கூரத்
தேர்வரு மேன்மைக் காஞ்சி நகர்க்கட்
சென்றற மெண்ணான்கு

நேசமொ டாற்றிப் பல்லுயி ருக்கொரு
நீயே தாயென்னு
நிகம மறைப்பொரு ளெளிது புலப்பட
நெடிதறி வித்தவளே

தாசர் தமக்கருள் வடிவுடை நாயகி
தாலோ தாலேலோ
தனிகர்கள் பரவிய வயிரவ பதியின
டாலோ தாலேலோ. (௧0)

தாலப்பருவ முற்றிற்று.

சப்பாணிப் பருவம்.

எட் டெட்டு வித்தையுமி ரொன்பான் புராணமு
மியாவர்க்கும் வளாய றுத்திட்
டித்தனை யெனக்கூற வொண் ணுத வண்ணத்
தியன்றபல பேத சமயக்
கட்டுற்ற நூல்களு மொழுக்கே வழக்கோடு
கழுவாய் விதந்து துணிவிற்
கழறுமிரு தியும்வேத தந்திரமு மேனைக்
கலைக்குலமு நினது செங்கை
கொட்டப் பிறந்தவொலி யிற்பிறந் தனவெனக்
குவலையம் பாதாளம் விண்
கொண்டாட விழுதையோர் திண்டாட மதிமுடிக்
கொற்றவன் கண்டா டவே
தட்டற்ற மாக்கருணை வடிவுடைய தேவிநீ
சப்பாணி கொட்டி யருளே
சதுர்மறை முழங்குவயி ரவபுரி மகிழ்ந்தமயில்
சப்பாணி கொட்டி யருளே. (க)

பார்மலியு மெத்தகைய வரைகட்கு நாயகப்
பான்மைதன தாப்பொ றுத்துப்
பரவுகிரி ராசனென் றுலகெலா மேத்திடப்
பட்டிரும் புகழ்ப டைத்துச்
சீர்மலியு மிமவான் மனைக்குரிய மேனையந்
தெரிவைகண் டுவகை கூர்ந்தென்
செய்தவச் செல்வியிவ ணீடூழி வாழ்கெனச்
செப்பிமிக் கன்பு கொட்டப்
போர்மலி திறத்தினற் புத்தேளிர் தம்மைவான்
போய்ப்பொருது வாட்டி யோட்டும்
புல்லியோர் நெஞ்சுபறை கொட்டநில மாதும்
பொலிந்தா வலங்கொட்ட வண்
டார்மலி கருங்கூந்தல் வடிவுடைய தேவிநீ
சப்பாணி கொட்டி யருளே
சதுர்மறை முழங்குவயி ரவபுரி மகிழ்ந்தமயில்
சப்பாணி கொட்டி யருளே. (உ)

புரமாகி நாடதாய்க் கண்டமாய் வருடமாய்ப்
புகறீவு மாய்வி ரிந்த
பூவுலகு தன்னையத னேடேனை யுலகமும்
புடைபெயர்ந் தழிவு றுமே
சிரமேல் வகித்தண்ட முண்டசிறு செய்யவாய்த்
தேந்துழாய் மாலை மாலைத்
தெண்டிரை'கொழிக்குமின் பாற்புணரி நாப்பணிற்
சிரமமின் றெளிது தாங்கு

முரவோன் சிதம்பர நடங்கண்ட புண்ணியத்
துவனைக் கனிட்டை விரலா
டோராழி யாக்கித் தரித்திட்ட பங்கயத்
தொண்கரத் தொத்த முத்துத்
தரம்யாரு முணர்வரிய வடிவுடைய தேவிநீ
சப்பாணி கொட்டி யருளே
சதுர்மறை முழங்குவயி ரவபுரி மகிழ்ந்தமயில்
சப்பாணி கொட்டி யருளே. (ரு)

எவற்றையு மொருங்குணரு முற்றுணர் வுடைக்கடவு
ளீசான மேலை வதனத்
தியாமெலா மீடேற வருள்காமி காதியா
மேழுநான் காக மாந்தஞ்
சிவத்தொடு கலந்தபர ஞானியர்க் கோதியுள
சீரிய விலக்க ணங்கள்
சேரத் தெரிந்துகோ டற்கிலக் கியமெனத்
திகழ்பட் டினத்த டிகளி
னிவப்புறு குலத்தொர்வணி கன்பொதி யெருத்திற்
கு நிலனட்ட பட்ட முளையை
நிலைபெயர்ப் பரிதாத் தளிர்ப்பித்த வளரொளியு
ணீங்காது நிலவு மொளியே
தவத்தவர் தவக்கருது வடிவுடைய தேவிநீ
சப்பாணி கொட்டி யருளே
சதுர்மறை முழங்குவயி ரவபுரி மகிழ்ந்தமயில்
சப்பாணி கொட்டி யருளே. (சு)

பலகலையும் விபரீத சந்தேக மின்றிப்
படித்தொழுகு மாதி சைவர்
பாவனு மந்திரக் கிரியைவழு வாமற்
பரிந்துபுரி யாக சாலைக்
குலவிவல னுகச் சுழித்துமீப் படர்தீக்
கொழுந்தெழு கொழும் புகையினைக்
கொண்மூ வினங்கண்டு வளரொளிப் பரமர்தங்
கோடீர மேக சாலங்
கலகமிட வருகின்ற தெனவெருவி வாயிலிற்
கலவிச் சரண் புகுந்து
கையினை யெடுத்துமுறை யிட்டாங்கு கணிதமில
களிறுநனி பிளிறு கோயிற்
சலசைதொழ நாளும்வாழ் வடிவுடைய தேவிநீ
சப்பாணி கொட்டி யருளே
சதுர்மறை முழங்குவயி ரவபுரி மகிழ்ந்தமயில்
சப்பாணி கொட்டி யருளே. (ரு)

வே று.

சங்கு தவழ்ந்து மிளிர்ந்து புலம்பு
தடங்கொள் கிடங்கினிடைத்
தழைசெவி நால்வாய்த் தறுகட் சிறுகட்
டரளக் கூர்ங்கோட்டுப்
பொங்கு சினத்துப் புகர்முக மையற்
பூட்கை நடைக்கிரிகள்
புக்கிள மென்பிடி யுடன்விளை யாடல்
புரிந்து சொரிந்தமதந்

தங்குத லாலே யிரதமு மணமுந்
தகையழி வெய்தியநீர்
சாலப் பண்டையின் மிகுமா மதுவுந்
தாது முகுக்குமலர்க்
கொங்குமிழ் பைங்கா வடுக புரத்தாய்
கொட்டுக சப்பாணி
குமரனை யுதவிய வடிவுடை யிடுகிடை
கொட்டுக சப்பாணி. (சு)

ஆலத் தன்மையு மமிழ்தின் றன்மையு
மணவி மருண்டுபிறழ்ந்
தையரி சிதறிக் குழையினை மோதி
யகன்றஞ் சனமெழுதிக்
காலற் கொருதுணை யாகி மதர்த்துக்
காளைய ருயிர்வௌவுங்
கலக விலோசன விண்ணர மங்கையர்
கரந்தை வரச்சேக்குஞ்
சீலத் தளிரடி மாதர்ச் சசியுஞ்
செஞ்சொற் குரிமகளுந்
தேசிக வண்ணச் செல்வியு மற்றைச்
சேடிய ரும்போற்றக்
கோலக் கோபுர வடுக புரத்தாய்
கொட்டுக சப்பாணி
குமரனை யுதவிய வடிவுடை யிடுகிடை
கொட்டுக சப்பாணி. (எ)

ஆரணி தந்துப கீரதி வேய்ந்தர
வாபர ணந்தரியா
வந்தி யிளம்பிறை சூடு சடாடவி
யாதி யிருங்குரவன்

சீரணி யொளிர்நின் திருவுரு நோக்குபு
சிந்தை கரைந்துருகிச்
செறிவுறு கழிபடர் காமங் கன்றித்
தேய்ந்தனை மேனியனுய்

நேரணி நின்றிட வுள்ள மிரங்கி
நெகிழ்ந்தன் னவனுக்கு
நிகரறு பரமா னந்த சுகந்தரு
நித்திய கல்யாணி

கூரணி நாரணி வடுக புரத்தாய்
கொட்டுக சப்பாணி
குமரனை யுதவிய வடிவுடை யிடுகிடை
கொட்டுக சப்பாணி. (அ)

அடியவர் தம்முட் டலைமை படைத்த
வகத்திய மாமுனிவற்
காரண மாயிர முன்பெழு வாயா
லரனுப தேசித்த

வடிதமிழ் நயமொழி நறுமலர் கொடுபொருள்
வாசந் திசைவீச
மல்குமெ யன்பெனு நாரிடை வீக்கிய
வண்பா மாலையினைப்

படியெழு தரிய வநிந்திதை யாதிப்
பாங்கியர் கைசெய்த
பஃறிருப் பள்ளித் தாமத் தினுகனி
பரிவிற் புனைபாவாய்
குடிகள் செழிக்கும் வடுக புரத்தாய்
கொட்டுக சப்பாணி
குமரனை யுதவிய வடிவுடை யிடுகிடை
கொட்டுக சப்பாணி. (கூ)

தவள சுதாமய கிரண கலாதர
சந்திர னைப்பாராச்
சஞ்சல முங்கய ரோகமு மறுவுந்
தணவா நீயேயோ
விவணைமை யொக்கும் பெற்றியை யென்ன
விகழ்ந்து சிரிப்பதுபோ
லீண்டிய தண்ணொளி முத்துச் சுட்டி
யிலங்கு முகத்திருவே
யுவமையில் சிவனின் மதன்றனு நூறு
மொருத்தன் மாவதனத்
தொருத்தன் முதலிய சிறுவரும் வாய்வைத்
துண்ணு முலையாளே
குவலையம் வழிபடு வடுக புரத்தாய்
கொட்டுக சப்பாணி
குமரனை யுதவிய வடிவுடை யிடுகிடை
கொட்டுக சப்பாணி. (கo)

சப்பாணிப்பருவ முற்றிற்று.

முத்தப்பருவம்.

வன்னிக் கொடியை நுதற்றலத்து
வைத்து வில்வே ளெருவிட்டு
வளத்து வளர வளர்ப்பவது
மன்னு மிரண்டு மூன்றுமுகக்
கன்னிக் கனியைத் தரவந்தக்
கனியி னினிய வெழிற்சுவையைக்
கண்வாய்த் தேக்கிக் களிகூர்ந்து
கன்னிநீயு முட னுண்ணத்
துன்னித் துய்க்கு மெம்பெருமான்
சோம சுந்தரப் பெயனைச்
சூடப் பிரியா வடிவுடைய
தோகாய் வயிர வன்கோயின்
முன்னிப் பொலிவாய் நின்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முதிர்சீர் மேனி வலம்புரியின்
முத்தே முத்தந் தருகவே. (க)

விளரிப் பண்ணைப் பெடையினெடு
விரும்பு சுரும்பு மிக்கிசையூஉ
மிடைய வவற்றைத் தெளிதீந்தேன்
விருந்து புரிந்து களிப்பித்து
வளவிப் புழுகு விரைச்சாந்து
வார்ந்து கறுத்து நுனிகுழன்று
மடங்கி நெறித்து நெய்த்தடர்ந்து
மன்ற வியற்கை மணங்கமழு

மளகக் காடு சுமந்துதளர்ந்
தலங்கு மருங்குல் வடிவுடையா
யாதி வயிர வன்கோயிற்
கமைந்த தூண்டா மணிவிளக்கே
முளரிச் செய்ய மலர்வாயின்
முத்தந் தருக முத்தமே
முதிர்சீர் மேனை வலம்புரியின்
முத்தே முத்தந் தருகவே. (உ)

கற்று மனம்போற் கசிந்துருகிக்
கண்ணீர் வாரப் புள கரும்பக்
கைகள் சென்னி மீதேறக்
கம்பித் துடல மொழிகுழறப்
பற்று நின்னைக் கடைப்பிடித்துப்
பற்று நின்ற பத்தர்தமைப்
பவஞ்ச மென்னும் படுகடனுப்
பண்வீழ்ந் தாழ்ந்து பதைப்பொழிய
வற்றுக் கருணைக் கரத்தெடுத்து
மன்னு சிவமாங் கரையுய்ப்ப
வல்லாய் வயிர வன்கோயில்
வாழ வாழும் வடிவுடையாய்
முற்று முகிழ்வா ணகைவாயின்
முத்தந் தருக முத்தமே
முதிர்சீர் மேனை வலம்புரியின்
முத்தே முத்தந் தருகவே. (௩)

மறுவி லாத பாசொளிய
மரக தத்தால் வனைபாவாய்
மாற்றுச் சாற்று வதற்கொண்ணு
மாமைச் சாம்பூ நதப்பொன்னே
பெறுத லரிய நிரதிசயப்
பேரா னந்தப் பெருவாழ்வே
பேணுந் தொண்டர் குறித்தவெலாம்
பெருகத் தருசிந் தாமணியே
பொறுமை வாய்மை யருள்வாய்ந்தார்
புந்திக் கமலத் தனப்பேடே
புகழ்சால் வயிர வன்கோயில்
புரக்குந் தாயே வடிவுடையாய்
முறுவல் பூத்த செம்பவள
முத்தந் தருக முத்தமே
முதிர்சீர் மேனை வலம்புரியின்
முத்தே முத்தந் தருகவே. (ச)

பழிக்கோ ருறையு ளாயைந்து
பாத கஞ்செய் கொடியோரும்
பரிந்து சரண கதியடையிற்
பாது காக்குந் தயாநிதியே
விழித்தா ரழலுக் கிரையாக்கி
வேளை வென்ற கோளரிகால்
விழுந்து வேண்ட வூடலொரீஇ
மேவு மின்ப மென்பிடியே

செழித்தா காயத் தளவறிவான்
செல்வ போன்று நீடுபொழில்
செறியும் வயிர வன்கோயிற்
செல்வக் கன்னீ வடிவுடையாய்
மொழித்தே னொழுகுஞ் சேதாம்பன்
முத்தந் தருக முத்தமே
முதிர்சீர் மேனை வலம்புரியின்
முத்தே முத்தந் தருகவே. (ரு)

வே று.

சீல நிரம்பிய மாதவ முனிவரர்
சித்த ரியக்கர்கணஞ்
செற்றிய கருடர்கின் னரர்கிம் புருடர்
சிறந்திடு கந்தருவர்
ஞால முடித்திசை யேந்தி யனைத்தையு
நன்குணர் சேடாதி
நாகர் வசுக்கண் மருத்துவ ராதவர்
நான்கை யிரட்டுதிசா
பால ரெனைப்பலர் பூசனை யாற்றிப்
பரவலு மவர்வேட்ட
பயன்முழு துதவிய வடுக புரத்தாய்
பழமறை மொழிபூவாய்
மூல புராதன வடிவுடை யம்மே
முத்த மளித்தருளே
முடிவு கடந்தவள் வடிவு கடந்தவண்
முத்த மளித்தருளே. (சு)

தொண்டர் விரும்பிய பண்ட மொருங்கே
துன்ன விரைந்தருளுஞ்
சுந்தரி சந்தத மந்தர நாடு
துதைந்து களிப்பவர்நின்
புண்டரி கப்பத மெய்திப் போற்றப்
புன்க ணகற்றியுளாய்
பூரணி யாரணி காரணி நாரணி
பொலம்பூங் கொம்பனையா
யண்டநி றைந்தபல் லுலகுரு விப்போ
யாங்காங் கணிசெய்யு
மற்புத கோபுர வடுக புரத்தா
யழியா தொளிர்மின்னே
முண்டக மலர்முக வடிவுடை யம்மே
முத்த மளித்தருளே
முடிவு கடந்தவள் வடிவு கடந்தவண்
முத்த மளித்தருளே. (௭)

மந்தண மாகச் சுருதியு ணடுவண்
வைகு மறுப்பொருளே
மறுவற வோதிய வந்தணர் சிந்தையின்
மன்னிய வின்னமுதே
கந்த னெனுஞ்சிறு மதலையை மடியின்
கண்வைத் தொண்பவளக்
கவினுர் கனிவாய் முத்தங் கொண்டு
களிக்கும் பெண்ணரசே

செந்தளிர் கோது கருங்குயின் முழவொலி
செவியுற வெருவிமுகிற்
றெழிப்பென வல்குறு வடுக புரத்தாய்
தேசிக தெய்வதமே
முந்தமு ளைத்தெழு வடிவுடை யம்மே
முத்த மளித்தருளே
முடிவு கடந்தவள் வடிவுக டந்தவண்
முத்த மளித்தருளே. (அ)

கோதறு கற்பெனும் வாலிய புணரிக்
கூல வருந்ததிமுற்
கூறிய தாபத பன்னியர் யாருங்
குழுமிக் குளிர்நறவத்
தாதவிழ் முல்லைப் போதினை நின்னிரு
சரணத் தாமரைமீத்
தங்கத் தூவியி றைஞ்சி வழுத்தத்
தண்ணருள் பாலிப்பாய்
பூதப கீரதி வீசியை வீசிப்
பொலிசடை வளரொளியெம்
புண்ணிய னண்ணிய வடுக புரத்தொரு
போழ்து மிகந்தறியாய்
மூதழ கொழுகிய வடிவுடை யம்மே
முத்த மளித்தருளே
முடிவு கடந்தவள் வடிவுக டந்தவண்
முத்த மளித்தருளே. (௯)

மாகமு மாழ்பில மும்பெற லரியதொர்
வாழ்வைப் புடவிபெற
வண்பொருண் முத்தமிழ் முத்தமிழ் வாரிதி
மகிழ்விற் பொங்கியிடப்

பாகடர் பூகமி லாங்கலி தேமாப்
பலவுங் குலவுஞ்சீர்ப்
பாண்டிய தேசமும் யாங்களு முய்யப்
பண்டு தடாதகையாய்ச்

சோகவி மோசன பாசன மாகிய
தொன்மது ரைப்பதியிற்
றோன்றிய திருவே வடுக புரத்தெந்
துணையே மென்பிணையே

மோகன சாமள வடிவுடை யம்மே
முத்த மளித்தருளே
முடிவு கடந்தவள் வடிவு கடந்தவண்
முத்த மளித்தருளே. (௧௦)

முத்தப்பருவ முற்றிற்று.

வருகைப்பருவம்.

பொற்புமலி விலைவரம் பறியாத வானவிற்
போலுநவ மணிகு யின்ற
பொன்னு லியன்றபூம் பாதசா லத்தொடு
புலம்புஞ் சிலம்பும் வேய்ந்தே

யெற்புதிய நளினமல ரிழையுநின் சிற்றடியை
யிருநில மடந்தை சூட
விருடிபன் னியவொலாங் கனகபூ ரணகும்ப
மேந்தியெதிர் கொண்டு வாழ்த்த
வற்புதப் பாமாலை யேழகத் திருவணிக
ரன்பின ரணிந்து பரவ
வரமகளிர் சசிவாணி கமலையா தியரவ்
வவர்க்குரிப் பணிகள் புரிய
வற்புறு கருங்கற் பெருங்கோயில் வடுகபுர
மருவுசிற் பனாவ ருகவே
வளரொளியி னுருவனாயி லளவளவு மொருபசிய
வடிவுடைய மயில்வ ருகவே. (க)

சொல்லார்ந்த வேதத்தி னந்தமோ லிட்டுநின்
சொருபத்தை யாது முணராத்
துயர்சற் றெழிந்துபின் றொடரநடை கண்டனத்
தொழுதியின மென்று தொடர
வில்லார்ந்த சங்கநிதி பதுமநிதி முனியா
விளங்குசிந் தாம ணியுடன்
விளைத்தவைந் தருவுங் கடைக்கணிக் கின்றவெவ்
வேலையையு மவ்வே லையிற்
சொல்லாதி யற்றிமேற் கதிசார்து மென்னத்
துணிந்தன படர்ந்து தொடரத்
துரியநிலை யனுபவப் பெரியோர்க ணெஞ்சுந்
துளங்கா துடங்கு தொடர

வல்லாரை வல்லா ரெனச்செயும் வடுகபுர
மருவுசிற் பரைவ ருகவே
வளரொளியி னுருவமாயி லளவளவு மொருபசிய
வடிவுடைய மயில்வ ருகவே. (உ)

நெய்யினொடு திரிதகழி யொன்றுமில் லாமே
நிரந்தரந் திகழ்தீ பமே
நித்தியா னந்தபர ஞானமே யெங்கணு
நிறைந்தகரு ணநி லயமே
பையுலவு பாப்புருக் குண்டலினி நாமம்
பரித்தான்ம வர்க்க வுடலிற்
பரவுமூ லாதார தானத்தி னிலவிமல
பரிபாக கால நோக்கிப்
பொய்யொருவு மெய்யுணர்வை யையமற வுய்யும்வ
கை பொள்ளெனத் தருமா தியே
பூதமுத னுதபரி யந்தமா மாறுறு
புகறத்து வங்க டந்து
மையண வவற்றிற் கதீதையாய் வடுகபுர
மருவுசிற் பரைவ ருகவே
வளரொளியி னுருவமாயி லளவளவு மொருபசிய
வடிவுடைய மயில்வ ருகவே (௩)

வெண்ணிலவு தவழ்சடில முடிகாண் விருப்பினுல்
விதியோதி மப்ப றவையாய்
விண்ணூ டெழுந்துபோய் விரிசிறை யயர்ந்தோய்
ந்து மேனின்று வீழ்கிற் குமோர்

தண்ணிலவு கேதகைப் போதெதிர யானைநீ
சாற்றென வினைய காலத்
தம்பிரான் சென்னிவாழ் தவமின்மை யேன்வழீ
இச் சதகோடி யூழி சென்ற
வண்ணலே யெனமீண்டு கண்டென்று பொய்க்கரிக்
கதனையு முடன்ப டுத்த
வன்னவற் காலயம் பூசனை சிறப்பொழித்
தங்கணு னங்க ணேங்கும்
வண்ணமிட லருளுமா சத்தியே வடுகபுர
மருவுசிற் பரைவ ருகவே
வளரொளியி னுருவனாயி லளவளவு மொருபசிய
வடிவுடைய மயில்வ ருகவே. (௪)

பொன்றவரு கடைநாளி லேனுமுனை யன்பினுற்
புந்திவன சத்து நிறுவிப்
போற்றிக் குடங்கைநீ ராட்டிக் கிடைத்தசில
பூத்தூய் வணங்கி னேரைத்
தொன்றுபற் பல்பவத் தாற்றளவில் பாவத்
தொடக்கறுத் தொண்க யிலைமீத்
துலங்குசிவ லோகத் திருந்தமணி கண்டச்
சுயஞ்சோதி பக்கல் வைக்கும்
வென்றிபுனை பூங்கழற் செல்வியே புகழ்குலாம்
வீரபாண் டியபு ரத்தின்
மேதகப் பொலியே முகப்பெருந் திருவணிகர்
வேண்டுபணி முழுது ஞற்றி

மன்றவனு தினமும் பராய்நிற்ப வடுகபுர
மருவுசிற் பனாவ ருகவே
வளரொளியி னுருவவாயி லளவளவு மொருபசிய
வடிவுடைய மயில்வ ருகவே. (ரு)

வே று.

சருவ சீவ தயாநிதியே
சார்ந்தார் தங்கட் கிருநிதியே
தவஞ்சா லிமவான் கண்மணியே
சாற்ற வரிய மனோன்மணியே
கருவ மிக்க கயமுகனைக்
கடிது கடிந்து கடிகமழ்கார்க்
கடநீர் கவிழ்க்குங் கவுள்யானைக்
கன்றை யீன்ற மடப்பிடியே
பருவ வெழிலி யார்ப்படக்கிப்
பால ருருந் தேரொலிவிட்
படரும் வடுக நாதபுரம்
பண்டு பெற்ற பெரும்பேறே
யருவ வுருவ வடிவுடைய
வமிழ்தே வருக வருகவே
யகில முயிர்த்த வுயிர்க்குயிரா
மன்னே வருக வருகவே. (சா)

பேசு மதுரம் பழுத்ததமிழ்ப்
பிரச மருந்துங் கிளியளியே
பெண்மைக் குணம்யா வுந்திரண்டு
பெருகி நிறைந்த வாலயமே

மாசின் மறையாய் மந்திரமாய்
மன்னு வேள்வி யாயவியாய்
வன்னி யாகி யெச்சனுமாய்
வயங்கா நின்ற மாச்சுடரோ
யேசில் வடுக நாதபுரத்
தெந்த ஞான்றுந் தணவாமே
யிமையோ ரேத்த வீற்றிருக்கு
மினிய சுவைத்தீஞ் செழுங்கனியே
யாசு கலவா வடிவுடைய
வமிழ்தே வருக வருகவே
யகில முயிர்த்த வுயிர்க்குயிரா
மன்னே வருக வருகவே. (எ)

சந்த மறையி னுச்சி யெனச்
சான்றோர் பரவு முபநிடமுந்
தன்மை தெரியாத் தடுமாறுஞ்
சமையா தீதப் பழம்பொருளே
பந்த மிகந்த பதியியலும்
பாசத் தியலுந் தம்மியலும்
படிறின் றுணர்ந்துன் வழிநிற்போர்
பவக்கா டெரிக்குந் தழற்பிழம்பே
நந்தல் கெழுமா தளவைகளா
னட்ட லாகாச் சுகப்பெருக்கே
நாளும் வடுக நாதபுர
நயந்த வின்சொற் கோகிலமே

யந்த நடுவில் வடிவுடைய
வமிழ்தே வருக வருகவே
யகில முயிர்த்த வுயிர்க்குயிரா
மன்னே வருக வருகவே. (அ)

தும்பை முதல நறுமலருந்
தூய வுள்ளத் தன்பும்விராய்த்
தொடுத்த திருப்பள் ளித்தாமஞ்
சூட்டத் தொடங்குங் கானுசிப்பிற்

பம்பு துகில்சோர் தரவதனைப்
பற்றி முழங்கை யாலிடுக்கிப்
பரிந்து வருந்து மொருதெரிவை
பத்திக் கிரங்கிப் பொன்முடியை

யிம்பர் வளைத்த வும்பர்பிரா
னிடப்பா கத்தின் மடப்பாவா
யிசைசேர் வடுக நாதபுரத்
தெம்பி ராட்டி வினைக்கார்கோட்

கம்பி நிகர்தாள் வடிவுடைய
வமிழ்தே வருக வருகவே
யகில முயிர்த்த வுயிர்க்குயிரா
மன்னே வருக வருகவே. (கூ)

ஒளியா யகண்ட வெளியான
வுமையே வருக நமையாளு
மொருவ னுள்ளக் கிழியெழுது
முருவே வருக கழைச்சாற்றின்

றெளிவே வருக மலைப்பிறந்த
தேனே வருக மெஞ்ஞானச்
செறிவே வருக பரமுத்தித்
திருவே வருக பேரின்பக்

களியே வருக யோகியருட்
கண்ணே வருக வண்ணலஞ்சேர்க்
காமர் வடுக நாதபுரங்
கனிந்த கனியே நீவருக

வளிமீ தூரும் வடிவுடைய
வமிழ்தே வருக வருகவே
யகில முயிர்த்த வுயிர்க்குயிரா
மன்னே வருக வருகவே. (௧௦)

வருகைப்பருவ முற்றிற்று.

அம்புலிப்பருவம்.

பேரா யிரங்கொண்ட பெருமாட்டி கலைகளிற்
பீடுற நிரம்பி நின்றாள்
பெரியோர்க ணின்னையுங் கலைகளி னிரம்பியுள
பெற்றியா னென்றுரைப்ப

தாரா கணத்தினுக் கரசனென வுன்னைச்
சகத்திரய முங்கி ளக்குந்
தவாதுபல் வகைப்படு கணங்கட்கு மரசியாய்ச்
சந்ததமு மிவணி லவுவா

டோராத வர்க்காண நாணிநீ வெள்குவாய்
தேவியின் னவளு மாங்கே
தேராத வர்க்காண நாணுவா ளித்தகு
திறத்தினெஞ் செல்வி யொத்தா
யாராய்பு வைரவன் கோயில்வள ரம்மையுட
னம்புலீ யாட வாவே
யடியரிடர் பொடிசெயடல் வடிவுடைய பிடியினுட
னம்புலீ யாட வாவே. (க)

உலகுபா ராட்டும் பெருந்தவத் தத்திரியி
னுழையுதித் திட்ட செயலா
லொருவாத கற்புமலி மாதனைப் புல்லினோ
ருள்ளகங் குளிர்வித் தலால்
விலகுரு விறல்கொண்டு கோலத்தை யெய்துபொலி
வேடனை யுவப்பித் தலால்
வேறுதுணை யில்லென விளைந்துகண் ணீர்வார்த்து
வேண்டுமிர வலனை நோக்கி
நிலவணிக் கரமமைத் தளிபுரியு நீரா
னிகழ்த்துமமிர் தத்தை மெய்யி
னேர்தலா லொண்மணிக் கண்மணிப் பெண்மணி
யை நீயுமொரு வாறு நேர்வா
யலகில்சீர் வைரவன் கோயில்வள ரம்மையுட
னம்புலீ யாட வாவே
யடியரிடர் பொடிசெயடல் வடிவுடைய பிடியினு
ட னம்புலீ யாட வாவே. (உ)

முன்னர்நின் மரபில்வரு முடிமுடி முடிச்செழியன்
முதுபுண்ணி யத்தி னூற்முன்
முத்தன நகைச்சிறிய முத்தனக் குழவியின்
முகிழ்த்தமை கருத்து ளோர்ந்தோ
தன்னமிச மென்னவுனை மன்னுபல நாலுந்
தழங்குமொற் றுமைபற் றியோ
தம்பிரான் சடைவைகி யெற்றைக்கு நீங்காத்
தனக்குமகிழ் செய்தி யென்றோ
நன்னர்நக ராசனுந் தந்தைபோற் பனிமேனி
நண்ணுதி யெனக்கு றித்தோ
நளினத் தளிர்க்கரத் திருவிரலி னிற்சுட்டி
நாடி யழையா நின்றன
ளன்னவயல் வைரவன் கோயில்வள ரம்மையுட
னம்புலீ யாட வாவே
யடியரிடர் பொடிசெயடல் வடிவுடைய பிடியினு
ட னம்புலீ யாட வாவே (ரு)

நீடலையி னூற்கனையை மோதுமுவர் நரலைவாய்
நித்தலுந் தோன்றி மறைவாய்
நிலைபெறு சிவானந்த வாரிதியி டத்தெழீஇ
நின்றென்று மிவணி லவுவாள்
கோடணவு தபநியக் குன்றத்தை வைகலுங்
குலவிவல மாக வருவாய்
கூறுமம் மேருமால் வரையினைச் சிலையாக்
குழைத்துப் பிடித்த திவள்கை

வீடல்புரி யரவங் கறித்துமென் றுண்டுமிழ
வெய்துயிர்த் திடுதி யிவளோ
விண்டவப் பாந்தள்கட் கிறையைக் கனிட்டைக்க
ண் மென்மோ திரஞ்செ றிப்பா
ளாடலமர் வைரவன் கோயில்வள ரம்மையுட
னம்புலீ யாட வாவே
யடியரிடர் பொடிசெயடல் வடிவுடைய பிடியினு
ட னம்புலீ யாட வாவே. (௪)

கொழிநிலாத் துன்னிய வுடம்பிற் களங்கமாங்
குறுமுயற் கறைப டைத்தாய்
கும்பிட்டு வாழ்த்துவோர் மும்மலக் கறையுங்
குமைத்திவ ளவர்ப் புரக்கும்
வழிவிடா தடருங் குருட்டிருட் டுக்கங்குல்
வாய்விசும் பூடு லவுவாய்
மண்டுமெகி லாண்டத்தி னுள்ளும் புறம்புமன
வரதமிவள் சேர்ந்து லவுவாள்
பழிவிராம் படியெவரு நினைகலா வைந்துமா
பாதகத் தொன்று செய்தாய்
பாபவர்க் கங்களிவள் பேர்சொன்ன பேரையும்
பற்றும லோட்டெ டுக்கு
மழிவிலா வைரவன் கோயில்வள ரம்மையுட
னம்புலீ யாட வாவே
யடியரிடர் பொடிசெயடல் வடிவுடைய பிடியினு
ட னம்புலீ யாட வாவே. (௫)

பாதவ முதற்பொருள்கள் யாவும் பசும்பொலன்
படிவங் கிடைத்து மிளிரும்
படியிலா வானுட்டி லளவிலாப் புத்தேளிர்
பரவிய விருந்த வேந்தும்

பூதலா தியபல்ல வுலகும் படைத்திட்ட
புங்கவனு மங்க வற்றைப்
புரந்தளி புரிந்துபாற் புணரிதுயில் புயல்வணப்
புருடோத் தமக்கு ரிசிலுங்

காதலாற் போற்றிக் கடைக்கணரு ளெய்துமா
கடைவாயி லிடைநிற் பவுங்
கருதியிவ ளென்கொலோ வருதியென வுனமலர்க்
கைகொடு விளிக்கின் றன

ளாதலால் வைரவன் கோயில்வள ரம்மையுட
னம்புலீ யாட வாவே
யடியரிடர் பொடிசெயடல் வடிவுடைய பிடியினு
ட னம்புலீ யாட வாவே. (சு)

குழகுபடு நின்மேனி நாடொறுந் தேய்வுறுங்
குறையையுஞ் சிந்தித் திலாள்
கொண்டமனை யாட்டியனை யொப்பநோக் காத்திக்
குணத்தையு மனத்தி லெண்ணுண்

மழகளிற் றுனனத் தன்சேயை யொருஞான்று
மதியின்றி யெள்ளி யந்தோ
மன்பதைகள் காணுதற் கொண்ணுப் புலைத்தன்மை
வாய்த்தநின் புன்மை யுன்னுள்

பழகியரன் முடியிற்றன் மாற்றவளி ணேடுதெவழ்
பான்மையைச் சிறிது நினையாள்
பண்டுநீ பெருநோன் புஞற்றியுனை போலும்
பரிந்துனை விளைந் தழைத்தா
ளழகுநிறை வைரவன் கோயில்வள ரம்மையுட
னம்புலீ யாட வாவே
யடியரிடர் பொடிசெயடல் வடிவுடைய பிடியினு
ட னம்புலீ யாட வாவே. (எ)

மேலுளைத் திட்டநின் பாவமும் பழிகளும்
விதவாத வேனை மிறையு
மேதக்க கன்னியிவள் சந்நிதியை மேவுமுன்
வெந்தழற் றுய்யின் வீயு
நாலுமறை யோதிமலர் மேலுறையும் வாலுணர்வி
ஞன்முகக் கடவு ளுக்கு
நாராய ணப்பெயர்ச் செம்மற்கு மேலாய
நற்பதம் பெற்றுய் யலா
மேலுமிவ் வெல்லாமொர் பொருளல்ல வழியா
திலங்குபர முத்தி வீட்டி
லிருவியுனை நிரதிசய வானந்த முந்தருவ
ளெட்டுணையு மைய மில்லை
யாலுமயில் வைரவன் கோயில்வள ரம்மையுட
னம்புலீ யாட வாவே
யடியரிடர் பொடிசெயடல் வடிவுடைய பிடியினுட
னம்புலீ யாட வாவே. (அ)

மாணிக்க மனையசிறு மாணிக் கலக்கண்செய்
மறலிதனை விழவு தைத்தோன்
மாறடு சலந்தரனை விரலெழுது திகிரிகொடு
மன்னுயிர் குடித்த திறலோன்

வாணிக்கு மணவாளன் மீக்குலவு சிரமொன்றை
வள்ளுகிரி னூற்ற டிந்தோன்
வஞ்சகத் தாருகா வனவிருடி மார்வேள்வி
வந்தன வொருங்க டர்த்தோன்

வேணிற்கு நிலைகுலைய விழிசற் றலர்த்தவனை
வெண்ணீ றெனக்கண் டவன்
மேயபுல விக்காலை யிவள்காலை முடிபுனைவன்
வெகுளினுய் வரிது கண்டா

யாணிப்பொன் வைரவன் கோயில்வள ரம்மையுட
னம்புலீ யாட வாவே
யடியரிடர் பொடிசெயடல் வடிவுடைய பிடியினு
ட னம்புலீ யாட வாவே. (கூ)

மாகலோ கத்தனையு நாகலோ கத்தனையும்
வாட்டித் துரந்த கொடிய
மயிடாதி யசுரனை மடங்கலூ ருய்த்தெறும்
மடங்கலூர் கன்னி யிவடன்

பாகமார் பல்கலையி லோர்கலைக் கூறெனும்
பரிசினையு மறிய கில்லாய்
பைந்துழாய்ப் படலையரி முன்னுய தேவனைப்
பருவேத் திரத்து மொத்து

மேகனு நந்தியெம் பெருமானும் வெங்கிட்
டிரிந்தோட வன்று வென்ற
விவண்முனியி னின்னேடு போகாது வல்லைநீ
யெய்திற் பிழைப் புனக்குண்

டாகலால் வைரவன் கோயில்வள ரம்மையுட
னம்புலீ யாட வாவே
யடியரிடர் பொடிசெயடல் வடிவுடைய பிடியினு
ட னம்புலீ யாட வாவே. (கo)

அம்புலிப்பருவ முற்றிற்று.

அம்மானைப்பருவம்.

பாசபந் தப்பெரும் பண்டங்கிறை யாநின்ற
பல்குயிர்த் துச்சி லின்கட்
பதியுமுன தறுகோடி சத்திநின் கைப்புகூஉப்
பலவன்ன பேத மேவி

மூசுமே லுலகிடைப் போய்மீளு மாறெனவு
முளரியம் போதி னின்று
மொய்த்தெழீஇப் பல்வகைப் பொறிவரிய வண்டி
ன முழுத்த கற்பக நறுமலர்

வாசமலி யினியசுவை வழிநறவு பருகுவான்
வானகம் புகுவ வெனவும்
வளரொளிப் பரமனுர் வாமபா கத்துறையு
மணிநகைக் கவுரி யுமையே

யாசகலும் வைரவன் கோயில்வா ழம்பிகே
யம்மானை யாடி யருளே
யதுலவடி வுடையா ளெனும்பெயர் தரித்தகுயி
லம்மானை யாடி யருளே. (க)

வானுரு மண்டபகி ரண்டங்கள் யாவையு
மனக்கொள்சங் கற்பத் தினல்
வல்லையிற் சிட்டித் தனந்தவிளை யாட்டயரு
மாதேவி நீயா தலே
யூனுரு முயிர்கள்கண் கூடா வுணர்ந்துய்ய
வுவையிற்றை யங்கை பற்றி
யொன்றன்பி னென்ருக முறுவல்பூத் துவகையா
லும்பரொறி பரிசு மானத்
தேனுரு மிதழியுந் தும்பையுங் கங்கையுந்
திங்களுந் தங்கி மிளிருஞ்
செஞ்சடில வளரொளித் தேவதே வன்பாற்
றிருந்துற விருந்த விமலா
யானுத வைரவன் கோயில்வா ழம்பிகே
யம்மானை யாடி யருளே
யதுலவடி வுடையா ளெனும்பெயர் தரித்தகுயி
லம்மானை யாடி யருளே. (உ)

முத்தொளி ததும்புநின் னம்மனையி னெழுகிரண
மூடிருட் காட ழித்து
மூதண்ட மூடுருவி மாதிர வனைப்பெலா
முழுநிலவு காலு மதனுற்

றத்துபுன லுறுமிதழ்த் தாமரை யொடுங்கவுந்
தழைகுமுதம் வாய்விள் ளவுந்
தம்முரிக் கணவர்ப் பிரிந்தமட வார்குழாஞ்
சாலமா ழாந்த யரவுஞ்
சித்திரம் வகுத்தனைய விருவகைப் பூமருவு
சேடியர் கரங்கூப் பவுஞ்
செகதலத் துள்ளார் வியப்பெய்தி நோக்கவுஞ்
சிந்தைநனி களிகூர்ந் துநீ
யத்தகைய வைரவன் கோயில்வா ழம்பிகே
யம்மானை யாடி யருளே
யதுலவடி வுடையா ளெனும்பெயர் தரித்தகுயி
லம்மானை யாடி யருளே. (௩)

நவமணி குயிற்றியொளி காலுமம் மனையுனது
நற்கரத் தெழுதல் காணூஉ
நளிர்கடன் முகட்டினின் றளவிலாக் கோள்களொ
டு நாள்களுஞ் சென்று மீப்போய்க்
குவலய வளாகத்து மீட்டுமடை கின்றன
குலாயவிச் செய்கை யார்க்குங்
குணிப்பதற் கெட்டாத பெரியவிம் மிதமெனக்
கூறிமா னவர்கண் மகிழத்
தவமுடிவின் வெளிவருநி னவவுருவ மென்னவே
தக்காரி றைஞ்சி நிற்பச்
சரண்புக் கவர்க்குமெய்ச் சரணுய வளரொளிச்
சங்கர னிடங் கவர்ந்தா

யவமொருவு வைரவன் கோயில்வா ழம்பிகே
யம்மானை யாடி யருளே
யதுலவடி வுடையா ளெனும்பெயர் தரித்தகுயி
லம்மானை யாடி யருளே. (ச)

வெடிவிடா வெண்முல்லை முகைநகை யரம்பையரும்
வெற்பனாயன் மனைமே னையும்
விண்ணவர்க் கிறைவனைப் பிரியாப் புலோமசையு
ம் விளரிப்ப ணளிமி ழற்றுங்
கடியுலாம் பங்கேரு காதனத் தினிதமர்
கருங்குழற் றையன் மாருங்
கண்பெற்ற பேற்றையா மின்றுபெற் றனமெனக்
கண்ணுற்று வாழ்த்தெ டுப்ப
முடிவிலா வாருயிர்கள் போக்குவர வைப்புரியு
முறையைத் தெளிப்ப போன்று
முதிரொளிய வம்மானை முன்னரும் பின்னரு
முயங்கிமீ தோங்கி மீள
வடியர்சேர் வைரவன் கோயில்வா ழம்பிகே
யம்மானை யாடி யருளே
யதுலவடி வுடையா ளெனும்பெயர் தரித்தகுயி
லம்மானை யாடி யருளே. (ரு)

வேறு.

உப்புட னுதகம் விராய தெனப்பல
வுயிர்தோ றுஞ்செறிவா
யொள்ளிய மணியிற் சுடரென வளரொளி
யும்பர் பிரான்பாங்க

ரொப்பொழு துந்தண வாமே வைகிய
விறைவீ மறைமுடியு
மின்ன வியற்கைய ளென்னு வின்னமு
மெய்த்தறி தற்கரியாய்
செப்பிடு மவனவ ளதுவென நின்ற
செகத்துச் சீவகணஞ்
சேர வுயிர்த்துத் தாயாய்த் தலையளி
செய்து வளர்ப்பவளே
யப்புவ ளங்கிளர் வடுக புரத்தா
ளாடுக வம்மனையே
யருண்முகி லாகிய வடிவுடை நாயகி
யாடுக வம்மனையே. (சூ)

பீடுறு மாதவர் தேடிய பொருளே
பெண்ணுரு வாயகிலம்
பெற்று விளங்கு மிளங்கொடி யின்பம்
பெருகு பயோததியே
யோடுஞ் செம்பொனு மொப்பக் காண்பவ
ருள்ளத் தொருவகிலா
யோமென நின்ற பதத்தி லடங்கிய
வுள்ளுறை யின்பயனே
வேடுரு மேவிக் கேழற் பின்போய்
விசையனொ டமராற்றி
வில்லடி யுண்ட பிரான்மெய்ப் புண்ணற
மென்முலை வேதிடுவா

யாடல ரங்கார் வடுக புரத்தா
　　ளாடுக வம்மனையே
　யருண்முகி லாகிய வடிவுடை நாயகி
　　யாடுக வம்மனையே.　(எ)

மாழை நிறத்துத் தாதியர் தங்கண்
　　மனக்களி தீராமே
　மாமது சூதன ேனாடு விரிஞ்சன்
　　வயிற்றெரிழில் போகாமே
வேழ முகத்தின ஞறு முகத்தன்
　　விருப்பமு மாறுமே
　விட்புல வாணர் நிமித்தமி ழைக்கும்
　　வேள்விக டேயாமே
பூழி யெனக்கரு வேளையெ ரித்தவர்
　　பொன்னட மோயாமே
　புத்தமு தச்சுவை யொத்துத் தொண்டர்கள்
　　புந்திபொ ருந்தமலா
யாழிய வகழ்சூழ் வடுக புரத்தா
　　ளாடுக வம்மனையே
　யருண்முகி லாகிய வடிவுடை நாயகி
　　யாடுக வம்மனையே.　(அ)

நகமு னளித்து வளர்த்த பசுங்கிளி
　　நான்மறை முடிகாணு
　நாதனி டப்புற மோவுத லோவிய
　　நண்ணிய புண்ணியமே

மகமுறு குண்டத் தங்கியி னவிகள்
வழங்கத் தாம்பெற்று
மகிழ்வொடு மேக்கெழு பற்ப னிறத்தவர்
வானுட் டவரோய்ப்பத்
தகவுறு மொன்பான் வகைமணி யாற்குயில்
சாலொளி யம்மனைக
டளிர்நிகர் பாணியி னின்றுய ரும்படி
தாரணி நாரணியே
யகரநி ரம்பிய வடுக புரத்தா
ளாடுக வம்மனையே
யருண்முகி லாகிய வடிவுடை நாயகி
யாடுக வம்மனையே. (௬)

கொங்குவி ரிந்து நறுந்துளி சிந்திய
கொழுநற வினிதுண்டு
கோதறு பண்க ளளிக்குல மோதுங்
குளிர்மலர் தறுசோலை
தங்கிவ ளைந்து கவிந்து நிழற்றத்
தண்மையு மினிமையுமேய்த்
தவநிறை தந்து தெளிந்து தடாகந்
தாப மகற்றியிடப்
புங்கவ ரிமையா மைக்குறு காரண
பூத ரெனப்பொலியும்
புரிகுழன் மடவிய ராம்புல னுக்கும்
போகம் புதிதூட்ட

வங்கணி பொங்கிய வடுக புரத்தா
ளாடுக வம்மனையே
யருண் முகி லாகிய வடிவுடை நாயகி
யாடுக வம்மனையே. (கo)

அம்மானைப்பருவ முற்றிற்று.

சி ற் றி ற் ப ரு வ ம்.

மூவருறை யுயர்வீடு முத்தியின் பென்ருேது
முழுநிதியம் வைக்கும் வீடு
மோனஞா னனந்த சிவயோக நிலைகண்ட
முனிவர்கள் வசிக்கும் வீடுங்

காவலைக் கடவுள ரிடத்தாற் றின்றமெய்க்
கண்ணு யிரற்கு வீடுங்
கதிகொளிரு சுடர்வீடு மெண்டிசைப் பாலகர்
களித்தமரும் வீடு நாள்கோள்

பாவிய சிறப்புமலி வீடுமாழ் பாதலம்
பற்றிவாழ் நாகர் வீடும்
பகுத்துத் தனித்தனி யியற்றிவிளை யாடுநீ
பாங்கிமா ரோத்தெ டுப்பத்

தேவர்தொழு மாவடுக நாதபுர மேவுபரை
சிறுவீடு கட்டி யருளே
தேங்கமல மலர்பொலங் கொடியனைய வடிவுடை
யள் சிறுவீடு கட்டி யருளே. (க)

எழுவகைத் தாதுவினொ டைவகைப் பௌதிகமு
மேய்வித்து நீடி மல்கு
மெழுபத் திரண்டா யிரத்தொகை நரம்பினையு
மேலுமா றுறவி சைத்து
நழுவலற மூன்றரைக் கோடியெனு மயிர்வேய்ந்து
நவவாயி லூடி யற்றி
நாலினோ டொன்பதுறழ் தத்துவப் பெயர்பூண்ட
நற்காவல் வினையா ளரைப்
பழகுற வமைத்துமன் பதைகட்கு வாழ்வீடு
பற்பல விழைத்திட் டவை
பழுதுபடின் வேறுமவ் வாறுபுரி யம்மையே
பரம கருணை நிலயமே
செழுநிழற் பொழில்வடுக நாதபுர மேவுபவர்
சிறுவீடு கட்டி யருளே
தேங்கமல மலர்பொலங் கொடியனைய வடிவுடை
யள் சிறுவீடு கட்டி யருளே. (உ)

துஞ்சலில் லாதமறை நாற்சிகரி யாகத்
துலங்குமா றங்க மெயிலாத்
தொலைவிலறு பத்துநாற் கலைகளுயர் மாடமாத்
தூயபதி னெண்பு ராண
மெஞ்சலறு மகழியா வெழில்கொள்வே தாந்தநூ
லின்குளிர் நிலா முற்றமா
விருபதிற் றெட்டா கமங்களத் தாணியா
வெழுகோடி. மனுவின் மிக்க

வஞ்சக் கரத்தரசு வீற்றிரா நின்றமெய்
யடியா ருளக் கோயில்க
ளமைத்தெம் பிரானேடு மக்கோயி லேறும்விளை
யாடுநீ யுவகை கூர்ந்து
செஞ்சொல்வண் டமிழ்வடுகை நாதபுர மேவுபரை
சிறுவீடு கட்டி யருளே
தேங்கமல மலர்பொலங் கொடியனைய வடிவுடை
யள் சிறுவீடு கட்டி யருளே. (௩)

அண்டமென் றேதுபெரு வெளியிலீ ரேழுநக
ரவ்வவற் றளவில் சிற்றூ
ரன்னவை யனைத்திற்கு மூன்றுதொழில் புரிகின்ற
வதிகாரி கண்மூ வராச்
சண்டனனி தாழ்ந்தவரை யுயிர்வெளவு கொலையாளி
சன்மார்க்க துன்மார்க்க மேற்
சரித்திடாச் சோதனைசெய் வாரிருவ ராகச்
சமைத்துமத் தன்மை போலப்
பிண்டத் தினுந்தந்து பொய்தலாட் டயரும்
பெருந்தகைச் சிறிய விடையாய்
பெற்றவூர் பெம்மான் றனித்துண்டு மூழ்குநற்
பேரின்ப மாவெள் ளமே
திண்டட்ஞ் சோவடுகை நாதபுர மேவுபரை
சிறுவீடு கட்டி யருளே
தேங்கமல மலர்பொலங் கொடியனைய வடிவுடை
யள் சிறுவீடு கட்டி யருளே. (௪)

ஆணிெெனடு பெண்புண ரருத்திகூர் கலவிக்க
ணுங்குவரு சிறிய துளியை
யங்ககர ணங்கள்சேர்த் தாகமாக் கிச்சீவ
னுையுங் குடிபு குத்தி
வீணுறு மகங்கார மமகார முங்கொளுவி
வெய்யபிர பஞ்ச மென்னும்
வேலைக் கிடந்தலைய விட்டாடல் பார்க்கின்ற
மெல்லிய வியற்செல் வியே
வாணியிந் திரையிந்தி ராணியா தியமாதர்
வாய்புதைத் தேவல் கேட்ப
வையமக ளென்னிற் சிறந்தாரி யாண்டுமிலர்
வாய்மை யீதென் றுவப்பச்
சேணுலகு பணிவடுக நாதபுர மேவுபவா
சிறுவீடு கட்டி யருளே
தேங்கமல மலர்பொலங் கொடியனைய வடிவுடை
யள் சிறுவீடு கட்டி யருளே. (ரு)

வே று.

அறிவின் முதிர்ந்தவர் பரவு பெரும்பொரு
ளமுத நிறைந்தமதி
யயனரி சுரபதி முதலிய தலைவர்க
ளனுதின மும்பரசி
மறைமொழி யாற்றொழு வினிது கடைக்கண்
வழங்கரு ளின்கடலே
மந்தர மத்தினை நிறுவித் தேவரும்
வல்லசு ரருமீர்ப்பக்

கறைவிட மாழியின் வாய்வர வெவருங்
கண்டு வெரீஇயெம்மைக்
காத்தி யெனப்புக வதனைத் துய்த்த
கபர்த்தி புறத்தமர்வாய்

செறிபொழில் சுலவிய வயிரவ பதிநிதி
சிற்றி லிழைத்தருளே
திருவுரு விடைமிடை வடிவுடை மயிலியல்
சிற்றி லிழைத்தருளே. (சு)

சேவை யுயர்த்தவர் நுதல்விழி நின்றெழு
சேவல் விறற்றுவசன்
றிசையீ ரைந்துந் திகிரி யுருட்டிய
தீச்சூர் முதலட்டுக்

காவர சுக்குப் பொன்னக ரரசைக்
கைக்கொள் நல்கிளையோன்
கருணை நிறைந்து ததும்பு சடானன
காங்கே யக்குரிசில்

வாவி மடித்தல மீதிவ ரச்செவ்
வாய்முத் தங்கொண்டு
வாழிய வென்கண் மணியே யென்று
மகிழ்ச்சி துளும்புறுவாய்

சீவர் சிவம்பெறு வயிரவ பதிநிதி
சிற்றி லிழைத்தருளே
திருவுரு விடைமிடை வடிவுடை மயிலியல்
சிற்றி லிழைத்தருளே. (எ)

சூல மெடுத்தவ னால மிடற்றன்
சுத்த னிராலம்பன்
சொப்பிர காசத் தப்பிர மேயன்
துரிசறு மேனிக்குக்
கோல மியற்றியொர் பாக மிருக்குங்
கோமள சுந்தரியே
கோவல னாகிக் குன்று கவித்த
குணக்குன் றுக்கிளையாய்
மூலமு நாப்பணு மந்தமு மாகி
முளைத்த முழுப்பொருளே
மொய்த்துயர் புகையால் விண்கரி தெனுமா
முத்தீ மேதஞ்செய்
சீலர் நெருங்கிய வயிரவ பதிநிதி
சிற்றி லிழைத்தருளே
திருவுரு விடைமிடை வடிவுடை மயிலியல்
சிற்றி லிழைத்தருளே. (அ)

வேத மெனும்புனல் வாவி யெழுந்து
விரிந்து தழைந்துமணம்
வீசுபு நினையே நினையுந் தொண்டர்கள்
வித்தக நெஞ்சென்னுங்
காதல ளிக்குக் கருணைத் தேனைக்
காலுந் தாமரையே
கங்கண மாசுண வங்கணர் சங்கரர்
காலனை யடர்காலர்

பூத ரகந்தொறு மண்ணிய நுண்ணியர்
பூத கணப்படையார்
புரகர ரங்கத் திடமே யிடமாப்
பொலியும் பூம்பாவாய்
சீதள மார்பணே வயிரவ பதிநிதி
சிற்றி லிழைத்தருளே
திருவுரு விடைமிடை வடிவுடை மயிலியல்
சிற்றி லிழைத்தருளே. (கூ)

முத்தி நறுங்கனி யிச்சித் தவர்கொள
முன்னித் தருதருவே
மூசிய நிலவு பரப்புங் கைலேயின்
முன்னவன் யாவர்க்கு
மத்தன் பாலிரு நாழிய நெற்பெற்
றளவி லறஞ்செய்தா
யரியய னுளமெனு நகுசின கரமுறு
மாதி பராபரையே
வித்தகர் மெய்த்தவர் விப்பிரர் நித்தலும்
வேண்டிப் போற்றியிட
வினையை யொழித்துப் பதியொடு சேர்க்கும்
மென்னடை யோதிமமே
சித்தர் குழாங்களுல் வயிரவ பதிநிதி
சிற்றி லிழைத்தருளே
திருவுரு விடைமிடை வடிவுடை மயிலியல்
சிற்றி லிழைத்தருளே. (கo)

சிற்றிற்பருவ முற்றிற்று.

ஊசற்பருவம்.

எழில்குலவு நான்மறைக் காலின்மே லுபநிடத
மென்கின்ற சுற்றணி யினை
யியைபுறச் சூழ்போக்கி யாகமப் பலகையை
யிசைத்து முத்திக் குரியவாம்
வழிகுலவு மைந்தெழுத் தாயமணி பீடத்தை
வாய்ப்பப் பதித்தல் செய்து
வளைவிலா வெண்ணுன் கிரட்டிய கலைக்குழுவை
வார்தொட ரெனப்பி ணித்துப்
பழிகுல விடாதபர நாதாந்த வீட்டிலுள
பண்ணமையு மூச லேறிப்
பரசிவ னசைப்பவே கழிபெரு மகிழ்ச்சியொடு
பல்காலு மாடல் புரிவாய்
பொழில்குலவி வளமலியும் வடுகபுர மாதரசி
பொன்னூச லாடி யருளே
பொருவரிய வடிவுடைய புனிதைதிரி புரைவரதை
பொன்னூச லாடி யருளே. (க)

தேற்றமுறு முனதுதிரு முககருணை வாரிதித்
தெள்ளமுத முள்ளிட மெலாந்
தேக்கித் திளைக்குமடி யார்மனத் தொட்டிலிற்
சேர்ந்தனையர் பத்தி யுந்தத்
தோற்றமுறு ஞானநித் திரைபுரியு மம்மையே
சொல்லிய நினைக்க வெட்டாச்
சுத்ததுரி யாதீத நிலயமக லாதுறை
சுகாரம்ப மோன வெளியே

யாற்றலுறு தலைமையை யடைந்தவா னோர்பதவி
யத்தனையு மைதி னுட
வம்பலத் துண்ணின்று பேரின்ப நடநவிலு
மங்கணு னெஞ்ச மாடப்
போற்றுநர் நினைத்தபெறும் வடுகபுர மாதரசி
பொன்னூச லாடி யருளே
பொருவரிய வடிவுடைய புனிதைதிரி புரைவரதை
பொன்னூச லாடி யருளே. (உ)

அன்புற்ற வைம்பத்தொ ரக்கரத் துருவமா
யாதியொ டனுதி யாகி
யாணினொடு பெண்ணலி யெனப்பரவு முயிரகத்
தவியா திலங்கு சோதி
யின்பத்து ளின்பமே யெழிலினுக் கெழிலே
யிருந்தவ ருளத்தி ருந்தா
யிரண்டுமின் றொன்றுமின் றத்துவித வியல்புறீஇ
யெங்கணு நிறைந்து நின்றாய்
முன்புற் றடைக்கலம் புக்கிடை விடாதுள்ள
முண்டக மலர்த்து தொண்டர்
முன்னியன வென்னவையு மன்னபொழு தேயுதவு
முழுமுதா லெம்பி ராட்டி
பொன்பெற்ற செல்வர்வாழ் வடுகபுர மாதரசி
பொன்னூச லாடி யருளே
பொருவரிய வடிவுடைய புனிதைதிரி புரைவரதை
பொன்னூச லாடி யருளே. (௩)

ஒன்ருகி யிகபர மிரண்டாய்க் குணங்கண்மூன்
றும்மாகி வேத நான்கா
யோதெழுத் தைந்தாகி யங்கங்க ளாருகி
யுலகடுக் கேழு மாகிக்
குன்ருத திசையெட்டு மாகியே வடிவெனக்
கூறுமொன் பானு மாகிக்
கூறுபடு வளிபத்து மாகிக் குலாவுவாய்
கொண்டலங் கண்டத் தினு
னன்ருன பாகத் திருந்தெற்றை ஞான்றுமிளிர்
நந்தா மணித்தீ பமே
நாரதன் றும்புரு விசைக்குமிசை கேட்டுமகிழ்
நங்கைமா தங்கி கௌரீ
பொன்ருத புகழ்கொண்ட வடுகபுர மாதரசி
பொன்னூச லாடி யருளே
பொருவரிய வடிவுடைய புனிதைதிரி புராவ
ரதை பொன்னூச லாடி யருளே. (ச)

நற்பரம முத்திபெறு ஞானசம் பந்தாதி
நவில்சைவ சமய குரவர்
நால்வர்திரு வாய்மலரு மினியதமிழ் வேதமா
நளிர்பாற் கடற்பி றந்த
வற்புதப் பொருளமுத மள்ளூற நெஞ்சா
லருந்தும் பெருந்த வத்தோர்க்
கழியாத நித்தியா னந்தமய வீட்டினை
யளிக்கும்வள் ளன்மை பூண்டாய்

சிற்பரம் பொருளைத் தெளிந்தனு பவிக்கின்ற
சிவயோக நிலைகை வந்தோர்
சிரமீது கரமேற வஞ்சலித் தேத்தநின்
சிற்றடி யுளம்ப திப்பாய்
பொற்புரிசை வானோங்கு வடுகபுர மாதரசி
பொன்னூச லாடி யருளே
பொருவரிய வடிவுடைய புனிதைதிரி புரைவரதை
பொன்னூச லாடி யருளே. (ரு)

வேறு.

மாசி லாதபெரி யோர்மனக் ககன
மன்னியே நிலவு மதியமே
மன்னு முக்கனியி னிரத மாகிநவ
மணிக ளூடிலவு சுடருமாய்த்
தேச காலமொடு திசையு மாகியிரு
திணையெ னப்பரவு முயிருமாய்த்
திகழொளிக் கொளியு மாகி நின்றிலகு
திப்பியக் கமல வதனியே
காசி லாதகன கத்தினைக் கொடு
கணக்கி றந்தபணி காட்டல்போற்
கரிய மாயைகொடு புவன போகதனு
கரண முந்தருகௌ மாரியே
யோசை வேதமலி வயிர வப்பதிமி
னூச லாடியரு ளுசலே
யுவகை நல்குவடி வுடைய நல்லிறைவி
யூச லாடியரு ளுசலே. (சு)

குவல யத்துயர்வு மொப்பு நீத்தினிய
குணக ணந்துறமு சலதியாய்க்
கோதி லங்கமறை யாறு நாலும்வெகு
கூறு பாடுகெழு மேனைய
நவையில் பல்கலையு முய்த்து ணர்ந்தவை
நவின்ற வாறொழுகு மந்தணர்
நாளும் வான்மருவு பண்ண வக்குழு
நயந்து தம்முருவி னேடுவந்
தவியை யேற்கும்வகை யாற்று கின்றன
வனந்த மானமக சாலைதோ
றவித லின்றிவள ரங்கி தங்குதலி
னல்லிருட். பரிசை யறிகலா
துவணு யர்ச்சியுறு வயிர வப்பதிமி
னூச லாடியரு ளூசலே
யுவகை நல்குவடி வுடைய நல்லிறைவி
யூச லாடியரு ளூசலே. (எ)

ஆடகப் பொதுவின் மாடுறத் திகழு
மதுல ஞானமய வெளியினின்
றரவ நீண்முனியு முழுவை மாதவனு
மகநெ கிழ்ந்துருகி நோக்கவு
மாடகத் திவவி யாழி னாதனு
மன்னு தும்புருவு மருகுமேய்
மல்கு மாதுரிய நாத கீதமது
மாதி ரம்படர வார்க்கவு

மீடில் பேரறிவு கூரு நந்திபர
னேலு மாமுழ வதிர்க்கவு
மின்ப நாடக மியற்று நாயக
னிடத்து வாழுமெம தன்னையே
யூடு லாவுமெழில் வயிர வப்பதிமி
னூச லாடியரு ளுசலே
யுவகை நல்குவடி வுடைய நல்லிறைவி
யூச லாடியரு ளுசலே. (அ)

கரக பாலதரன் மதன வேளையடு
கண்ணுதற் கடவு ளாடவே
காரட கும்பமத கரிமு கத்தனொடு
கந்த சுந்தரனு மாடவே
பரம மாகியவை குண்ட நீத்துததி
பள்ளி கொள்ளுமுகி லாடவே
பங்க யத்தவிசி னும்பர் மேவுபு
படைத்திடும் பிரம னுடவே
சுரகு லாதிபதி யாதி யெண்டிசை
துதைந்த காவலவ ராடவே
சொற்ற நான்குவகை யோனி யிற்கதி
தொடர்ந்த மன்பதைக ளாடவே
யுரனி னீடுமெயில் வயிர வப்பதிமி
னூச லாடியரு ளுசலே
யுவகை நல்குவடி வுடைய நல்லிறைவி
யூச லாடியரு ளுசலே. (கூ)

தேங்கு லாவிவழி செய்ய தாமரை
செறிந்த வாவிநிகர் தேவியே
சிற்ப ரானெழுது தற்கொ ணாதவொரு
திப்பியச் சொருப சிற்பராய்
நீங்க லாதவழ கென்னும் வாரிதியி
னின்றெ ழுந்தவிரு குமிழியை
நேர்ந்து நித்தில வடம்பு னைந்துற
நெருங்கு மென்முலை யிளங்கொடீ
யாங்க ளுய்யும்வண மிப்பெருந் தரையி
லெளிது வந்தவரு நிதியமே
யெல்லை யின்றியரு ளூற்றெடுத் தொழுக
வினிது நோக்கும்விழி வனிதையே
யோங்கி வாழ்வுவளர் வயிரவப் பதிமி
னூச லாடியரு ளூசலே
யுவகை நல்குவடி வுடைய நல்லிறைவி
யூச லாடியரு ளூசலே. (௧0)

ஊசற்பருவ முற்றிற்று.

வயிரவன்கோவில்
வடிவுடையம்மை பிள்ளைத்தமிழ்
முற்றிற்று.
